தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018


SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 216 | 29.1.2026 | THURSDAY | THAI : 15 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 216 | 29.1.2026 | வியாழக்கிழமை | தை : 15 | விலை : ரூ.5/–

## திருச்சியில் மலரும் நினைவுகளில் மூழ்கிய முதல்வர் ஸ்டாலின்

# “அரசியல் பேசாத திருமண மேடை!”



■ ஈரோடு திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் மாணவ மாணவிகளுக்கான லேப்டாப் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வீட்டு வசதி துறை அமைச்சர் சு முத்துசாமி, ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ,பிரகாஷ், ஈரோடு மேற்கு தொகுதி எம்எல்ஏ MC சந்திரகுமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் தாளாளர் சந்திரசேகரன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ ராதாபுரம் மேற்கு ஒன்றியம் சார்பில் கழக பொதுச்செயலாளர், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கினங்க, சட்டமன்ற தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குறுதி துண்டுபிரசுரங்கள், ராதாபுரம் பஞ்சாயத்துகளில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமல் ராஜா தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கழக அமைப்பு செயலாளர் ஏ. கே. சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டு துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார். கழக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் பா. நாராயண பெருமாள், மாவட்ட ஐடி விங் இணைச்செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் சரவணன்,மாவட்ட இளைஞரணி துணைச்செயலாளர் சுப்புராமன் , ஒன்றிய மாணவரணி செயலாளர் குமார், ஒன்றிய அமைப்பு சாரா ஓட்டுனர் அணிச் செயலாளர் விநாயகம், மற்றும் கிளை கழக நிர்வாகிகள் மின்னல், ஜெயராஜ், சுந்தர், ஸ்டீபன், சந்திரகுமார், பந்தல் இசக்கியப்பன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி: ஜன.29-

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் திருச்சி முன்னாள் நகர்மன்ற தலைவர் பாலகிருஷ்ணனின் பேரனும், முன்னாள் திமுக எம்எல்ஏ பரணிகுமாரின் மகனுமான ஆதித்யா பாலா மீனாட்சி ஆகியோரின் திருமணத்தை முதல்வர் ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ், மதிவேந்தன், முதல்வரின் மனைவி துர்கா, மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

திருமணத்தை நடத்தி வைத்த பின் முதல்வர் ஸ்டாலின் மணமக்களை வாழ்த்தி பேசியதாவது: ”எல்லோரும் சொன்னது போல, திமுக வளர்வதற்கு, நம்முடைய இரு வண்ணக்கொடி இந்த வட்டாரத்திலே பரவுவதற்கு, காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்தவர் நம்முடைய அருமை பெரியவர் பாலகிருஷ்ணன். அவர் இன்றைக்கு இல்லை என்று சொன்னாலும், அவருடைய அருமை மகனாக இருக்கக்கூடிய பரணிகுமார், அவர் விட்டுச் சென்றிருக்கக்கூடிய பணிகளையெல்லாம் எந்த அளவிற்கு இந்த இயக்கத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றி இருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

பாலகிருஷ்ணனை பொறுத்தவரை சொல்ல வேண்டும் என்று சொன்னால் அண்ணாவோடு, கருணாநிதியோடு, மறைந்த நம்முடைய பொதுச் செயலாளராக இருந்து மறைந்த பேராசிரியரோடு, அதேபோல அன்பிலாரோடு எப்படி நெருக்கமாக இருந்தார் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அவர் மாவட்டக் கழகத்தினுடைய பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கட்சியிலேயே சிறப்பாக பணியாற்றி இருக்கிறார். திமுக சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும் இருந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

நேரு சொன்னது போல, எங்கும் வெற்றி பெற முடியாத நிலையிலேயே திருச்சி நகராட்சி மன்ற தலைவராக அன்றைக்கு பெருவாரியான வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்று அவர் இந்த வட்டாரத்திலேயே, இந்த நகராட்சிக்கு, திருச்சி மாநகரத்திற்கு பொதுமக்களுக்கு எப்படியெல்லாம் பணியாற்றி இருக்கிறார், கட்சிக்கு எப்படியெல்லாம் தொண்டாற்றி இருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆக



அப்பாவிற்கு தப்பாமல் பிள்ளையாக நம்முடைய பரணிகுமார் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். பரணிகுமார் மாணவர் அணியிலே முதலில் பொறுப்பேற்று பணியாற்றினார். அதைத் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

தேர்தல் வேலையை எப்படியெல்லாம் ஆற்றி இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். நான் பரணிகுமாரை பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், இங்கே எல்லோரும் சொன்னார்கள். என்னோடு 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்னோடு சுற்றுப் பயணம் ஈடுபடுகிற போதெல்லாம் திருச்சிக்கு மட்டுமல்ல தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களுக்கும் அவர் சுற்றுப் பயணத்திலே என்னோடு கலந்து கொண்டிருக்கிறார்.

மறைந்த என்னுடைய ஆருயிர் நண்பன் பொய்யாமொழியும் நம்முடைய பரணிகுமாரும் தான் எனக்கு துணையாக சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்கு வருவார்கள், தொடர்ந்து வருவார்கள்.

சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல என்னுடைய காரை அவர்தான் ஓட்டி வருவார். அவங்க அப்பாவோட கார் எடுத்துட்டு வந்துருவார். அந்த காரில்தான் தமிழ்நாடு முழுவதும் நான் சுற்றுப்பயணத்தை நடத்தி இருக்கிறேன். அவரோடு பயணம் செய்த போது எந்தவித அச்சமும் இல்லாமல் பயணம் செய்ய முடியும். இரவிலே விழித்துக் கொண்டிருப்பான், பகலில் தூங்குவார். இது எல்லாருக்கும் தெரியும், அதிகமா சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இரவிலே அசோக் குமார் இங்க வந்திருக்கிறார், அசோக் குமாருக்கு எல்லாம் தெரியும். ஏனென்றால் நாங்களெல்லாம் ஒரு செட் அப்போ. இளைஞரணி தொடங்கிய நேரத்தில் அப்பொழுது தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் நடத்துகிற நேரத்தில் அவர்தான் கார் ஓட்டிக்கொண்டு வருவார். அந்த கார் ஓட்டிக்கொண்டு வருவது பல நிகழ்ச்சிகள் எனக்கு அனுபவம் உண்டு.

நான் பல இடங்களிலே கழகக் கொடி ஏற்றுவதற்காக காரை விட்டு இறங்கி நான் பல கிராமங்களில் கொடி ஏற்றுவதுண்டு. அப்பொழுது அவர் காரிலே உட்கார்ந்திருப்பார். காரைச் சுற்றி தாய்மார்கள், சில பெரியவர்கள் எல்லாம் சுற்றி சூழ்ந்து நின்று கொண்டிருப்பார்கள். அப்பொழுது பரணியைப் பார்த்து சில பேர் பேசிக் கொண்டிருப்பார்களாம். நான் வந்தவுடன் பரணி என்னிடத்தில் அவரே சொல்லுவார், ‘தலைவரே, நீங்க கொடியேத்தப் போயிட்டீங்க, நான் கார்ல உட்கார்ந்திருந்தேன். காரைத் திருப்பி விட்டுட்டு உட்கார்ந்திருந்தேன். ஆனா இங்க சுத்தி இருந்தவங்க எல்லாம் என்ன பேசுறாங்க தெரியுமா? பாரு அவர் எவ்வளவு ஒல்லியா இருக்கிறாரு, காரை ஓட்டுற டிரைவர் எவ்வளவு குண்டா இருக்காரு பார்த்தியா? அப்படின்னு அவரே சொல்லுவார் இதை.

எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால் அந்த அளவிற்கு அவர் என்னோடு இருந்து பழகியவர்கள். அதுமட்டுமல்ல சுற்றுப்பயணம் நடத்துகிற போது பல இடங்களில் நாங்கள் இரண்டு மணிக்கு, மூன்று மணிக்குத்தான் உறங்குவது, தூங்குவதுண்டு. அப்படித் தூங்குகிற நேரத்துல மறுநாள் காலை ஏழு மணிக்கு போக வேண்டும் என்ற நிகழ்ச்சி இருக்கும். அதனால சொல்லிவிட்டு தூங்குவோம், ஏழு மணிக்கு எழுப்பிவிடுப்பான்னு சொல்லுவோம். ஆனா அவரை யாரும் எழுப்ப முடியாது, நான்தான் போய் எழுப்பணும், அவர் வந்து எழுப்ப மாட்டார். அப்படித்தான் அப்படியெங்க பயணம் நடந்திருக்கிறது. ஆக அந்தப் பயணங்களெல்லாம் மறக்க முடியாது. எத்தனையோ இருக்கு, அதையெல்லாம் சொன்னா அவர் மேடையிலேயே உட்கார்ந்திருக்க முடியாது இப்போ. அதையெல்லாம் சொல்ல விரும்பல.

ஆக எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால் அந்தளவிற்கு ஒரு அன்போடு இருந்து பழகியவர்கள். நாங்கள் திருச்சிக்கு வருகிற போதெல்லாம் பாலகிருஷ்ணனுடைய வீட்டுக்கு, பரணிகுமார் வீட்டுக்கு நான் செல்லாமல் இருந்ததில்லை. நாங்கள் அந்த அளவிற்கு பாசத்தோடு பழகக்கூடிய குடும்பம். ஆக அந்தக் குடும்பத்திலேயே இன்றைக்கு குலவிளக்குகளாக இருக்கக்கூடிய நம்முடைய மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்க எப்படிப்பட்ட நேரத்தில் வந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். தேர்தல் நெருங்கிக்கிட்டிருக்கு, இன்னும் இரண்டு மூணு மாசத்துல தேர்தல் நிச்சயமாக வரப்போகிறது. இதற்கிடையிலேயே உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன் என்று சொன்னால், அந்தக் குடும்பத்தின் மீது நாங்கள் கொண்டிருக்கக்கூடிய பாசத்தின் காரணமாகத்தான் வந்திருக்கிறோம், வேறொன்றுமில்லை. ஏற்கனவே ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் திருச்சிக்கு வந்து, தஞ்சைக்குப் போய் ஒரு மாநாட்டை நடத்தினோம் அதுவும் உங்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல மகளிர் அணி மாநாடு ஒரு பக்கம், இளைஞரணி மாநாடு ஒரு பக்கம். அடுத்து நிறைவாகத் தேர்தலுக்கு இதே திருச்சியில் 10 லட்சம் பேர் திரளக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய மாநாட்டை நம்முடைய அமைச்சர் நேரு நடத்த இருக்கிறார், அதுவும் உங்களுக்குத் தெரியும், அதை அறிவித்திருக்கிறோம்.

நாங்க தொடர்ந்து பிஸியா இருக்கிற நேரம் இப்போ. அப்படி பிஸியா இருக்கிற நேரத்தில் வந்திருக்கிறோம்னா நம்முடைய பரணிகுமார் மீது, பாலகிருஷ்ணன் குடும்பத்தின் மீது நாங்கள் வைத்திருக்கக்கூடிய பற்றின் காரணமாகத்தான், அந்த நட்பின் காரணமாகத்தான் வந்திருக்கிறோம். அந்த நட்பின் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய பரணிகுமார் இல்லத்தில் இருக்கக்கூடிய இந்த குலவிளக்குகள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய, ‘வீட்டிற்கு விளக்காய் நாட்டுக்குத் தொண்டர்களாய்’ மணமக்கள் வாழுங்கள் வாழுங்கள் வாழுங்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்” என்று முதல்வர் உரை நிகழ்த்தினார்.



## “திமுக ஆட்சியில் இன்னும் 50% கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது” பிரேமலதா

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.29.-

“திமுக ஆட்சியில் 50 சதவீதம் நல்லது நடந்துள்ளது. 50 சதவீத கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளது,” என ஸ்ரீவில்லிபுத்தூரில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரன் ஆகியோர் புதன்கிழமை காலை சுவாமி தரிசனம் செய்தனர். அதன்பின் பிரேமலதா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், “கேப்டனின் தாய் தந்தையின் பெயர் ஆண்டாள் அழகர். ஆண்டாள் பெயரில் தான் கேப்டன் அனைத்து விஷயங்களும் செய்வார்.

இன்று ஆண்டாள் தாயாரிடம் தேமுதிகவுக்கும், தமிழக மக்களுக்கும் நல்லது நடக்க வேண்டும் என வேண்டிக் கொண்டேன். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ‘உள்ளம் தேடி இல்லம் நாடி’ என்ற தலைப்பில் நிர்வாகிகள் சந்திப்பும், கேப்டன் ரத யாத்திரை என்ற பெயரில் மக்கள் சந்திப்பும் நடத்தி உள்ளோம். பிரச்சார பயணம் முடிந்து பிப்ரவரி 3ம் தேதி சென்னை திரும்பிய பின் கூட்டணி குறித்து ஆலோசித்து அறிவிக்கப்படும்.

இந்தியாவிலேயே தமிழகம் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் என முதல்வர் கூறியது அவரது கருத்து. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. திமுக ஆட்சியில் 50 சதவீதம் நல்லது நடந்துள்ளது. 50 சதவீத கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளது,” என தெரிவித்தார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## ஆசிரியர் சமுதாயத்திற்கு என்றும் உறுதுணையாக இருப்பது திமுக அரசு : நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

திண்டுக்கல், ஜன.29-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி சார்பில் வட்டார செயலாளர் லூ. டியோனி, வட்டார தலைவர் ஈஸ்வரி, வட்டார பொருளாளர் அன்பரசு ஆகியோர் தலைமையில் 150 க்கும் மேற்பட்ட ஆசிரியை, ஆசிரியர்கள் உறுதி அளிக்கப்பட்ட ஒய்வு ஊதிய திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் உறுதுணையாக இருந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.



ஆசிரியர் பெருமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர்

ஐ.பெரியசாமி அவர்கள் இன்று வரை ஆசிரியர் சமுதாயத்திற்கு உறுதுணையாக இருப்பது திமுக அரசு. நிகழ்ச்சியின் போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, பேரூராட்சி மன்ற தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் என்ற மணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னாள்; ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, திமுக நகர சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர், நெல்லை சுபாஷ், அய்யம்பாளையம் சுந்தர், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# குரல் அற்றவர்களின் குரலாக ஒலிக்கவேண்டிய அரசு அவர்களை கைவிடக்கூடாது : ரெட் தொண்டு நிறுவன நிறுவனர் ஏகே.அபுதாகிர்

தேனி ஜன.29-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் நகரில் முல்லை பெரியாற்றின் கரையில் உள்ளது மேலூர் மற்றும் களிமேட்டுப்பட்டி, பெரியாற்றின் கரை பகுதியில் இயற்கையோடு இயைந்து குடியிருந்து வருவதை இப்பகுதி மக்கள் பெற்ற வரம் என மற்ற அனைவரும் நினைக்கும் படி இருந்தாலும், உண்மையில் அதுவே இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு சாபமாக அமைந்துவிட்டது என்பதே உண்மை. இப்பகுதியில் வசிப்பவர்கள் பெரும்பாலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்வை வாழும் அன்றாடங்காச்சி கூலி தொழிலாளர்கள். முல்லை பெரியாற்றில் எப்போது வெள்ளம் வந்தாலும், முதலில் பாதிக்கப்படுவது மேலூர் மற்றும் களிமேட்டுபட்டி மக்கள்தான். வெள்ளம் வரும்போது இவர்கள் தங்களின் உடமைகளை இழந்து தெருவில் நிற்ககூடிய அவலநிலையிலேயே உள்ளனர்.

இப்பகுதியில் வசிப்பவர்கள் கூலி தொழிலாளர்களாக இருக்கும் நிலையில், அவர்கள் தன் வாழ்விடத்தை மீண்டும் சீரமைப்பது என்பது அவ்வளவு எளிது இல்லை. கடந்த 1980களில் வரலாறு காணாத பெரும் வெள்ளம் வந்த நிலையில், மதுரை நகரமே வெள்ளத்தில் மூழ்கியது. அந்த வெள்ளத்தின் கோரம் எப்படியாக இருந்தது என்றால் இறந்த மக்களை புதைக்க கூட இயலாத நிலையில் பிணங்களை வெள்ள நீரிலேயே விட்டுவிடும் அளவிற்கு மனிதபேரழிவு அவலமாக இருந்தது என்பதை வரலாறு பதிவு செய்துள்ளது.

முல்லைபெரியாற்றில் எப்போதெல்லாம் பெரும் வெள்ளம் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ஆற்றின் இரு கரையிலும் அமைந்துள்ள இந்த களிமேட்டுபட்டி, மேலூர் குடியிருப்புகள் முழுவதுமாக வெள்ளநீரில் முழ்கி மக்கள் தத்தளிக்கும் நிலை நிரந்தரமாகிவிட்டதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1985 ல் அப்போதிருந்த முதல்வர் எம்ஜிஆர் தலைமையில் அமைந்த அதிமுக அரசு, மோசமாக பாதிக்கபட்ட 158 குடும்பங்களுக்கு மாற்று இடத்தில் வீட்டுமனை வழங்கி, அதில் அவர்களை மறு குடியமர்த்த முயன்றது. அரசு வழங்கிய இடம் காஜி கருத்தராவுத்தர் ஹவுதியாவிடம் சமையல் பணி புரிந்த அப்துல் ரகுமான் ராவுத்தர் மகன் காதர்மைதீன் 1951ஆம் ஆண்டில் கல் உடைக்கும் தொழிலாளி சவரிமுத்து சேர்வையிடம் சர்வே எண் 1086ல் இரண்டு ஏக்கர் 58 சென்டை கிரையம் பெற்ற இடத்தையும், ஹாஜி கருத்தராவுத்தர் உறவினர் பாத்திமாவுக்கு சொந்தமான நிலங்களையும், அரசு கையகப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய நிலையில், வீட்டுமனை இடம் வழங்கிய இடத்தில் அரசு பாதிக்கபட்ட ஏழை மக்கள் வீடு கட்ட எந்த அரசு உதவியையும் வழங்காத நிலையில், பாதிக்கபட்ட பொதுமக்கள் அங்கு குடியேற முடியவில்லை.

அரசு கையகப்படுத்திய நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு :



அரசு கையகப்படுத்திய நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர் .இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் நிவாரண உதவிகளை பெற்று மீண்டும், மேலூர் மற்றும் களிமேட்டுபட்டியிலேயே வசித்து வந்தனர். இந்நிலையில் 1992ல் மீண்டும் வந்த பெருவெள்ளத்தால் மக்களின் அனைத்து உடைமைகளும் வெள்ளநீரில் அடித்து செல்லபட்டு விட்டது. அப்போது அரசு அப்பகுதி மக்களுக்கு நிவாரணமாக பள்ளி மாணவர்களுக்கு மீண்டும் பாட புத்தகங்களும் குடும்பதினருக்கு அரசு ஆவணங்களான ரேசன் கார்டு, பிறப்பு, இறப்பு மாதிரியான சான்றிதழ்களை மட்டும் வழங்கிய நிலையில், வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டது.

அரசு அதிகாரிகள் கிடப்பில் போட்டுள்ளனர்:

பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மீண்டும் அந்த பட்டா சான்றிதழ்களை மட்டும் இதுவரை வழங்கவில்லை. பலமுறை பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணமாக வழங்கப்பட்ட வீட்டுமனைக்குள்ள பட்டாக்களை வழங்ககோரியும், அவர்களுக்குரிய இடத்தில் வீடு கட்ட அனுமதி கேட்டும் இதுவரை அரசு அதிகாரிகள் அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காது கிடப்பில் போட்டுள்ளனர்.

நில உரிமையாளர்களுக்கு ஆதரவாக நீதிமன்ற உத்தரவு :

இந்நிலையில் அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி துறை கையகப்படுத்திய நில உரிமையாளர்களுக்கு ஆதரவாக நீதிமன்ற உத்தரவு பிறப்பித்துள்ளது. இதில் பாத்திமா அவர்களின் மகன் நத்தர் மீரான், சவரிமுத்து சேர்வையிடம் கிரையம் பெற்ற காதர் மைதீன் அவர்களின் வாரிசான ஏ.கே. அபுதாஹிரிடம் அவருக்குரிய 2 ஏக்கர் 58 செண்ட் இடத்தை ஒப்படைக்காமல், அந்த இடத்தினை 2020ம் ஆண்டில் பத்திரபதிவு துறையின் மூலம் நத்தர் மீரான் என்பவர் முகம்மது குலாம் என்பவருக்கு வில்லங்கப் படுத்தியுள்ளனர்.

தனி நபருக்கு ஒரு பகுதியை மோசடியாக. விற்றுள்ளனர்:

பின் 2024ம் ஆண்டில் தனி நபருக்கு அந்த இடத்தின் ஒரு பகுதியை மோசடியாக. விற்றுள்ளனர். இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டதற்கு ஆதிராவிடரர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வழங்கப்பட்ட 158 வீட்டுமனைகளும் தனிநபர்பட்டா நிலம் அதை அரசு உரிய இழப்பீடு வழங்கி நிலம் கையகப்படுத்திய பின்பே பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ளது. இருப்பினும் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தியதால், பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்த முடியவில்லை என்று பதிலளிக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் தரப்பில் சாதாரண பிரச்சனைகளுக்கு கூட உச்சநீதிமன்றம் வரை சென்று போராடும் தமிழக அரசு 158 குடும்பங்களின் நிலையை கருத்தில் கொள்ளாது வழக்கை மேல்முறையீடு கூட செய்யாது, இப்படி விடுவது சரியா? என்று கேள்வி எழுப்புகின்றனர்.

மோசடியாக பதிவு செய்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் :

இவர்களை ஒருங்கினைத்து அவர்களுக்காக போராடும் சமூகசேவகரும், ரெட் தொண்டு நிறுவன நிறுவனரும் ஆன ஏ.கே அபுதாகிர் அவர்கள் கூறும்போது 40 ஆண்டுகளுக்கு முன் பட்டா வழங்கபட்டது. சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள அடித்தட்டு மக்கள், குரல் அற்றவர்களின் குரலாக ஒலிக்கவேண்டிய அரசு அவர்களை கைவிடக்கூடாது. மேலும் இடத்தினை மோசடியாக பதிவு செய்தவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசு ஒதுக்கிய நிலத்தை பயனாளிகளுக்கு கொடுப்பதை உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதையும், மேலும் தனிநபர்கள் அரசு ஒதுக்கிய நிலங்களை வேறு நபர்கள் பத்திர பதிவு செய்வதை தடைசெய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பாதிக்கப்பட்ட மக்களின் ஒருங்கிணைப்பு அமைப்பின் மூலம் வரும் பிப்ரவரி 2ல் தேனி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்க போவதாக கூறினார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அய்யூர் கிராமத்தில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு அச்சம்பட்டி பழனி பாதயாத்திரை குழு சார்பில் இரண்டாம் ஆண்டு அன்னதானம் கிராம மந்தையில் நடைபெற்றது. இதில்பொதுமக்கள் மற்றும் சுற்று வட்டாரபொதுமக்களும் ஐயப்ப முருக பக்தர்களும் கலந்து கொண்டனர். அன்னதானவிழா ஏற்பாடுகளை விழா குழுவினர் செய்திருந்தனர்.



# அம்பிளிக்கை அருள்மிகு ஸ்ரீசெளடம்மன் திருக்கோயிலில் கும்பாபிஷேக விழா

திண்டுக்கல், ஜன.29.-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரம், அம்பிளிக்கையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செளடம்மன் திருக்கோயிலில் கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் சீனிவாசன், “இத்தகைய ஆன்மிக விழாக்கள் மக்கள் ஒற்றுமையையும் சமய நல்லிணக்கத்தையும் வளர்க்கும். ஸ்ரீ செளடம்மன் அம்மனின் அருளால் அனைத்து மக்களுக்கும் நலமும் வளமும் கிடைக்க வேண்டும்” என வாழ்த்துரை வழங்கினார்.

ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நடராஜ், “கோயில் கும்பாபிஷேகம் போன்ற விழாக்கள் கிராமத்தின் பெருமையை உயர்த்துவதுடன், இளைஞர்களிடையே ஆன்மிக உணர்வை வளர்க்கும்” என தெரிவித்தார்.

விழாவின் இறுதியில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மொத்தத்தில், அருள்மிகு ஸ்ரீ செளடம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா ஆன்மிக எழுச்சியுடன் சிறப்பாக நிறைவடைந்தது.

இவ்விழாவில் அதிமுக முன்னாள் அமைச்சர் சீனிவாசன் மற்றும் ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து கும்பாபிஷேக நிகழ்ச்சியை சிறப்பித்தனர். அவர்களுடன் அதிமுக கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள், பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டைவ.உ.சி மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் சுகுமார் திருநெல்வேலி மாவட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பணிபுரிந்து வரும் சூரியநாராயணன், இளநிலை நிர்வாக அலுவலர் அவர்களுக்கு துறையில் சிறந்த சேவையை செய்தமைக்கு சிறப்பான பணியைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் கேடய வழங்கி சிறப்பித்து வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரசன்னகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் உள்ளனர்.



■ குடியரசு தின விழாவை முன்னிட்டு மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சியில் தலைவர் சுமதி பாண்டியராஜன், தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்திஉறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அருகில் துணைத் தலைவர் ராமராஜ், செயல் அலுவலர்சசிகலா, திமுக மாவட்ட அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன், மற்றும் வார்டு உறுப்பினர்கள் மகளிர் குழுவினர் கலந்து கொண்டனர்.

# ஈஷா அறக்கட்டளைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.29.-

ஈஷா அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை அப்புறப்படுத்தக் கோரிய வழக்குகளை தள்ளுபடி செய்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோவை மாவட்டம் இக்கரை போளுவாம்பட்டியில் ஈஷா அறக்கட்டளை சார்பில், கால பைரவர் எரிவாயு தகன மண்டபம் கட்ட கிராம பஞ்சாயத்து வழங்கிய அனுமதியை ரத்து செய்யக் கோரியும், தகன மண்டபத்தை அப்புறப்படுத்த கோரியும், அதே பகுதியைச் சேர்ந்த சிவஞானம் உள்ளிட்டோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.



இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்எம் ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி அருள் முருகன் அடங்கிய அமர்வு, தமிழ்நாடு கிராம பஞ்சாயத்துகள் கல்லறை மற்றும் சுடுகாடு விதிகள்படி குடியிருப்பு அல்லது குடிநீர் விநியோக ஆதாரத்தில் இருந்து 90 மீட்டர் தொலைவில் மயானம் அமைக்க உரிமம் வழங்குவதை தடை செய்யவில்லை என்றும் கிராம பஞ்சாயத்திடம் உரிமம் பெறுவது மட்டுமே முன்நிபந்தனை என்றும் விதிகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், தகன மண்டபம் கட்டுவது சமூகத்திற்கு பயன்படும் என்றும், பொது நலனுக்கு எதிரானது என்று கூற முடியாது எனவும் கூறிய நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# தென்கொரியா மீதான வரியை 25% ஆக அதிகரித்தார் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜன.29.-

தென்கொரியப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை 25% ஆக உயர்த்துவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “அமெரிக்காவின் வர்த்தக ஒப்பந்தங்கள் மிகவும் முக்கியமானவை. ஒப்புக்கொண்டபடி நாங்கள் வரியைக் குறைத்துள்ளோம். அதே வேகத்தை எங்கள் வர்த்தகக் கூட்டாளிகளிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்" என தெரிவித்



துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை அடுத்து தென்கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கள், மரக் கட்டைகள் (Lumber) மற்றும் மருந்துப் பொருட்கள் மீதான வரிகள் உயர்த்தப்படும். இதர பொருட்களுக்கான வரி விகிதம் 15லிருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

அமெரிக்கக் கப்பல் கட்டும் தளங்களைப் புதுப்பிப்பது உள்ளிட்ட திட்டங்களுக்காக, சுமார் 350 பில்லியன் டாலர் தொகையை அமெரிக்காவில் முதலீடு செய்வதாக தென்கொரியா கடந்த ஜூலை மாதம் உறுதியளித்திருந்தது. இதற்கான 5 மசோதாக்கள் தற்போது தென்கொரிய நாடாளுமன்றத்தின் நிலைக்குழு பரிசீலனையில் உள்ளன. இந்தச் சட்ட நடைமுறைகள் தாமதமாவதால் அதிருப்தியடைந்த ட்ரம்ப் அந்நாட்டுக்கான வரியை உயர்த்தியதாக கூறப்படுகிறது.



# திருப்பூரில் முஸ்லிம் விடுதலைக் கழகம் பெயரில் புதிய அமைப்பு தொடக்கம்

திருப்பூர், ஜன.29-

வரலாற்று மீட்சியே! வாழ்வியல் நீட்சி!!” என்ற பெரும் முழக்கத்துடன் முஸ்லிம் விடுதலைக் கழகம் என்ற புதிய அமைப்பு துவங்கப்பட்டுள்ளதாக அதன் நிறுவனத் தலைவர் திருப்பூர் மஜீத் அறிவித்துள்ளார்.

திருப்பூர் காங்கேயம் ரோடு தனியார் மண்டபத்தில், முஸ்லிம் விடுதலை கழகம் சார்பில் திருப்பூர் மஜீத் கூறுகையில், ஜனநாயக வழியில் மக்கள் பணியாற்றும் நோக்கத்துடன் இந்த அமைப்பு தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்தேச விடுதலைக்காக தமது உடல், பொருள் ஆவி என அனைத்தையும் தியாகம் செய்த முஸ்லிம் சமூகம், இன்றைய சூழலில் சொந்த நாட்டிலேயே மூன்றாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதும், அவர்களின் தியாக வரலாறு மறைக்கப்பட்டு மறுக்கப்பட்டு, சிதைக்கப்படுவதும் ஜனநாயகத்திற்கு எதிரான செயல் என அவர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும் அரசியல் அதிகாரத்தில் முஸ்லிம் சமூகம் அனைத்தையும் இழந்து அடித்தள நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது மிகுந்த வேதனையை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தனர் இந்த நிலையை மாற்றி சமூகத்தின் அரசியல் உரிமைகள் மற்றும் பிரதிநிதித்துவத்தை மீட்டெடுப்பதே அமைப்பின் பிரதான கொள்கை முழக்கம் என கூறினர்.

வருகின்ற 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு கூட்டணியில் உள்ள இஸ்லாமிய இயக்கங்களுக்கு வழக்கம்போல் சம்பிரதாயத்திற்காக ஒன்று இரண்டு இடங்கள் மட்டுமே வழங்காமல் உரிய அங்கீகாரம் அளித்து அதிக தொகுதிகளை ஒதுக்கி தமிழக சட்டப்பேரவையில் வலுவான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என முஸ்லிம் விடுதலைக் கழகத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# ஹவுரா வந்தே பாரத் ரயிலில் இனி அசைவ உணவு விநியோகம்

கொல்கத்தா, ஜன.29.-

மேற்கு வங்க மாநிலம் ஹவுராவில் இருந்து அசாம் மாநிலம் காமாக்யா வரையில் படுக்கை வசதி கொண்ட, நாட்டின் முதல் வந்தே பாரத் ரயிலை கடந்த 17ம் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.




இந்த ரயில் வாரத்தில் 6 நாட்கள் இயக்கப் படுகின்றன. இந்த ரயிலில் பயணம் செய்யும்போது சைவ உணவுகள் மட்டுமே வழங்கப்படுவதாகவும், அசைவ உணவும் விநியோகிக்க வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து கிழக்கு ரயில்வே அதிகாரிகள் நேற்று கூறும்போது, "பயணிகளின் கோரிக்கையை ஏற்று அடுத்த வாரம் முதல் ஹவுரா காமாக்யா வந்தே பாரத் ரயில் மெனுவில் அசைவ உணவும் சேர்க்கப்படும். விருப்பப்படும் பயணிகள் அசைவ உணவை பெறலாம்.

அதில், காமாக்யாவில் இருந்து புறப்படும் வந்தே பாரத் ரயிலில் அசாம் உணவு வகைகள் இடம்பெறும். அதேபோல் ஹவுராவில் இருந்து புறப்படும் வந்தே பாரத் ரயிலில் மேற்கு வங்க உணவு வகைகள் இடம்பெறும்" என்றனர். இதில் இறைச்சி, மீன் போன்ற அசைவ உணவுகள் இடம்பெற உள்ளன

# ‘ஜனநாயகன்’ மீதான புகார் தீவிரமானது சென்னை ஐகோர்ட் கருத்து



சென்னை, ஜன.29.-

‘ஜனநாயகன்’ படத்தில் அந்நிய சக்திகள் நாட்டில் பிரச்சினை ஏற்படுத்துவது போலவும், மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிப்பது போலவும் காட்சிகள் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்ட புகார் தீவிரமானது என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

‘ஜனநாயகன்’ படத்துக்கு சான்று வழங்கும்படி தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சென்சார் போர்டு தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கில், தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா ம்ற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு பிறப்பித்த உத்தரவில், அந்நிய சக்திகள் நாட்டில் மதப் பிரச்சினையை உருவாக்கும் வகையிலும், மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையிலும், ராணுவம் சம்பந்தப்பட்ட காட்சிகளும், வசனங்களும் இடம் பெற்றுள்ளதாக புகாரில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த புகார் தீவிரமானது. படத்தை திரையிட அனுமதிக்கும் முன், இதை தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும் என்பதால், படம் மறு ஆய்வு குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

சென்சார் போர்டுக்கு பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்காதது தவறு. படத்தை மறு ஆய்வுக்கு அனுப்புவது குறித்த முடிவு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த முடிவுக்கு எதிராக கோரிக்கை வைக்காமல் பட நிறுவனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. கோரிக்கை வைக்காத நிலையில் முடிவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க முடியாது எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “திரையில் நடித்த விஜய் அரசியலில் மோடியுடன் இணைந்து நடிக்கிறார்” சபாநாயகர் அப்பாவு



திருநெல்வேலி, ஜன.29.-

திரையில் நடித்த விஜய் அரசியலில் மோடியுடன் இணைந்து நடித்து வருவதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.

‘உலகம் உங்கள் கையில்’ திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாக கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வு நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் ஆட்சியர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கினார்.

நெல்லை மாவட்டத்தில் 128 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக 29 அரசு மற்றும் அரசு சார்ந்த கல்லூரிகளில் பயிலும் 9 ஆயிரத்து 703 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக இன்று 27 தனியார் கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் 2480 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் இறுதியில் சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் மறைவிற்கு சபாநாயகர் என்ற முறையில் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் 20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதாக அறிவித்திருந்தார். அதன் முதல் கட்டமாக நெல்லை மாவட்டத்தில் 9,703 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்று நெல்லை மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாக 2,480 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் இந்த மடிக்கணினியை தங்கள் வேலைவாய்ப்புக்கும், உலக அறிவை வளர்த்துக் கொள்ளவும் பயன்படுத்த வேண்டும். இதில் ஆடல், பாடல், நடிப்பு ஆகியவற்றை பார்த்தாலும் அது நீர்க்குமிழி போன்றது நம்பிக்கையற்றது காணமல் போய்விடும் எனவே மாணவர்கள் இதனை கடந்து சென்றுவிட வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 234 எம்எல்ஏக்கள் கொண்ட சபையில், மரபுப்படி தயாரித்துக் கொடுத்த உரையை வாசிப்பதுதான் ஆளுநரின் கடமை (To read, not to speak). ஆனால், அவர் அதைச் செய்யாமல் வெளியேறியது மரபல்ல.

ஆளுநரின் நடவடிக்கை தனிப்பட்ட முடிவல்ல, அவர் யாரோ ஒருவரின் கைப்பாவையாகச் செயல்படுகிறார். அதிமுக பாஜக கூட்டணியில் அன்புமணி 10 சதவீத ஒதுக்கீடு வேண்டும் என்கிறார், டிடிவி தினகரன் இட ஒதுக்கீட்டை எதிர்கிறார், எடப்பாடி பழனிசாமியால் என்ன செய்ய முடியும், இந்தக் கூட்டணி ஓர் ஒவ்வாத கூட்டணியாகும்.

வட இந்தியாவில் இஸ்லாமிய வாக்குகளைப் பிரிக்க ஒவைசியை பாஜக பயன்படுத்துவது போல, தமிழகத்தில் சிறுபான்மையினர் மற்றும் திமுக எதிர்ப்பு வாக்குகளைப் பிரிக்க விஜய்யைப் பயன்படுத்துகிறது பாஜக. விஜய்யும் மோடியும் சேர்ந்து திட்டமிட்டு நடத்தும் நாடகம் தான் இது, திரைப்படத்தில் நடிப்பதை விட்டுவிட்டு விஜய் அரசியலில் மோடியுடன் சேர்ந்து நடிக்கிறார் என கூறினார்.

# பாபநாசம் அருகே தமிழக முதல்வருக்கு கருப்புக் கொடி காட்டிய 8 விவசாயிகள் கைது



பாபநாசம், ஜன.29.-

தஞ்சை மாவட்டம் பாபநாசம் அருகே தமிழக முதல்வருக்கு கருப்புக் கொடி காட்டிய 8 விவசாயிகளை போலீஸார் கைது செய்துள்ளனர்.

பாபநாசம் வட்டம் திருமண்டங்குடியில் உள்ள திருஆரூரான் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் புதிய நிர்வாகம் வட்டியுடன் வழங்க வேண்டும்.

தங்களின் பெயரில் திருஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகம் வங்கிகளில் வாங்கிய கடனை தள்ளுபடி செய்து, சிபில் ஸ்கோர் பிரச்சினையில் இருந்து விவசாயிகளை விடுவிக்க வேண்டும்,

திருமண்டங்குடி சர்க்கரை ஆலை நிர்வாகத்தை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும், சாராயம் தயாரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்திக் கடந்த 2022ம் ஆண்டு நவ.30ம் தேதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கும்பகோணம் வட்டம், தாராசுரம் புறவழிச்சாலையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் மஹல்லா ஜமாத் ஒருங்கிணைப்பு மாநில மாநாட்டில் பங்கேற்க முதல்வர் கும்பகோணம் வருவதாக தெரியவந்தது. முதல்வரின் வருகையையொட்டி, முதல்வர் ஸ்டாலின் முன்னதாக போராட்டம் நடைபெறும் என விவசாயிகள் அறிவித்திருந்தனர்.

இதையடுத்து, மாநாட்டிற்காக தஞ்சாவூரில் இருந்து நான்கு வழிச்சாலை வழியாக கும்பகோணத்திற்கு இன்று (ஜன.28) மதியம் தமிழக முதல்வர் ஸ்டாலின் வாகனத்தில் வந்தார். அப்போது, பாபநாசம் வட்டம் வேம்புக்குடி டோல் கேட் அருகில் மறைந்திருந்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கரும்பு விவசாயிகள், கரும்பு விவசாயிகள் சங்க உறுப்பினர் செந்தில்குமார் தலைமையில் திடிரென சாலையோரம் வந்து நின்று கருப்புக்கெடிடி காட்டி தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதையறிந்த போலீஸார் போராட்டத்தில் ஈடுபட்ட செந்தில் குமார், சரபோஜி, கலையரசன், மோகன் தாஸ், முருகன், குமரேசன், அருண் உள்ளிட்ட 8 பேரை கைது செய்தனர். இதனால் அச்சாலை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது



# பணி நிரந்தரம், ஊதிய உயர்வு கோரி சென்னையில் ஆஷா பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜன.29.-

பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆஷா பணியாளர்கள் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மலை கிராமங்களில் சுகாதார நலத் திட்டங்களை அமல்படுத்தி வரும் ஆஷா பணியாளர்களுக்கு பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, போனஸ் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஆஷா பணியாளர் சங்கம் சார்பில் சிவானந்தா சாலையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் வஹிதா நிஜாம் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பங்கேற்று, தங்கள் கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் வஹிதா நிஜாம் கூறியதாவது: தமிழகத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆஷா பணியாளர்கள் மலைப்பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள், அங்கு வசிக்கும் கர்ப்பிணிகளை கண்காணித்தல், குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புதுச்சேரியில் ரூ.18 ஆயிரம்: ஆஷா பணியாளர்களுக்கு மத்திய, மாநில நிதித் திட்டத்தின் கீழ் ரூ.5,500 மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஊதியத்தை உயர்த்தி வழங்கக்கோரி நீண்ட நாட்களாக போராடி வருகிறோம். ஆனால் அரசு இதில் கவனம் செலுத்தவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

அண்டை மாநிலங்களைப் போல எங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். புதுச்சேரியில் ஆஷா பணியாளர்களுக்கு மாதம் ரூ.18 ஆயிரம் ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே தமிழக அரசு எங்களது கோரிக்கைகளை பரிசீலித்து உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

துறை சார்ந்த காலிப் பணியிடங்களில் எங்களை பணியமர்த்தி, பணிநிரந்தரம் செய்ய வேண்டும். பிரசவ கால உதவித் தொகையாக 6 மாதவிடுப்புடன் கூடிய ஊதியம் வழங்க வேண்டும். அதே போல் ஈஎஸ்ஐ, போனஸ், பென்ஷன் போன்ற சமூக பாதுகாப்புகளையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மனைவி பிரிந்து சென்ற விரக்தியில் முதல்வர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் முன்னாள் ராணுவ வீரர் கைது

சென்னை, ஜன.29.-

தமிழக முதல்வர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த, முன்னாள் ராணுவ வீரர் கைது செய்யப்பட்டார். சென்னை, எழும்பூரில் உள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறைக்கு, நேற்று போன் அழைப்பு ஒன்று வந்தது. எதிர் முனையில் பேசிய நபர், “முதல்வர் வீட்டில் வெடிகுண்டு வைத்துள்ளேன். அது சற்று நேரத்தில் வெடித்து சிதறும்” எனக் கூறி, இணைப்பை துண்டித்தார். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த போலீஸார், உடனடியாக இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தனர்.

இதையடுத்து, சைபர் க்ரைம் போலீஸார் உதவியுடன் மிரட்டல் வந்த செல்போன் எண் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரரான பாலமுருகன் (43) என்பது தெரியவந்தது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இவரை விட்டு மனைவி பிரிந்து சென்றுள்ளார். அந்த விரக்தியில் மது போதையில் இதுபோன்று மிரட்டல் விடுத்தது தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர். பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், 2 முறை ஏற்கெனவே பாலமுருகன் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்த விழிப்புணர்வுக்காக நடமாடும் செயல்முறை விளக்க வாகனங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், கொடியசைத்து துவக்கி வைத்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்




# பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான எம்எல்ஏவை கைது செய்ய வலியுறுத்தி முன்னாள் அமைச்சர் ரோஜா தலைமையில் ஒய் எஸ் ஆர் காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியல்

திருமலை, ஜன.29.-

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம் ரயில்வே கோடூர் ஜனசேனா கட்சியின் எம்.எல்.ஏ. ஆரவ ஸ்ரீதர் திருமணமான பெண்ணை மிரட்டி பாலியியல் பலாத்காரம் செய்து ஐந்து முறை கருக்கலைப்பு செய்ததாக பாதிக்கப்பட்ட பெண் குற்றம்சாட்டி தனக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என வீடியோ வெளியிட்டார். இந்தநிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர் நடிகை ரோஜா, ஒருங்கிணைந்த சித்தூர் மாவட்ட ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சி தலைவரும் முன்னாள் திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் கருணாகர் ரெட்டி தலைமையில் நகரியில் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

பாலியியல் குற்றச்சாட்டிற்கு ஆளான எம்.எல்.ஏ.வை கைது செய்ய வேண்டும், பெண்களுக்கு பாதுகாப்பு கேள்வி குறியாக உள்ள நிலையில் உள்துறை அமைச்சர் அனிதா ராஜினா செய்ய வேண்டும், தொடர்ந்து நியாயம் பேசும் நடிகர் ஜனசேனா கட்சி தலைவர் பவன் கல்யாண் அவரது கட்சியில் தொடர்ந்து பாலியியல் குற்றச்சாட்டு கொலை குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாக ரோஜா குற்றசாட்டி ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டார். இதனையடுத்து போலீசார் சாலை மறியலில் ஈடுப்பட்ட அனைவரையும் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

# “விமான விபத்து குறித்து விசாரணை” அஜித் பவாரின் மறைவை அடுத்து ஏக்நாத் ஷிண்டே அறிவிப்பு





மும்பை, ஜன.29.-

மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் உள்ளிட்ட ஐவர் உயிரிழப்புக்குக் காரணமான விமான விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

அஜித் பவாரின் மறைவு மகாராஷ்டிர அரசியலில் மிகப் பெரிய சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் அஜித் பவாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அஜித் பவாரின் மறைவு தொடர்பாக மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்டிர துணை முதல்வரும் சிவ சேனாவின் தலைவருமான ஏக்நாத் ஷிண்டே, “அஜித் பவார் எனக்கு மூத்த சகோதரர் போன்றவர். அவரது மறைவு மகாராஷ்டிராவுக்கு ஒரு பேரிழப்பு. மகாராஷ்டிராவின் முன்னேற்றத்துக்காக நானும் அவரும் ஒரு குழுவாகப் பணியாற்றினோம். இப்போது அந்த குழுவின் ஒரு பகுதி இல்லாமல் போய்விட்டது. எனது மூத்த சகோதரரும் என்னைவிட்டு பிரிந்துவிட்டார். இந்த நாள் மகாராஷ்டிராவுக்கு ஒரு கருப்பு நாள். இந்த சம்பவம் அனைவருக்கும் மிகுந்த வேதனையை அளிக்கிறது.

அவர், தெளிவாகவும், சரளமாகவும் பேசக்கூடியவர். திறமையும் கடின உழைப்பும் கொண்டவர். நேர்மை மற்றும் அர்ப்பணிப்புமிக்க தலைவர். பார்க்கலாம்... யோசிக்கலாம்... போன்ற வார்த்தைகள் அவரது அகராதியில் கிடையாது.

அவர் எதற்காகவும் காத்திருக்க மாட்டார். எதைச் செய்ய விரும்பினாலும் அதை உடனடியாகச் செய்வார். தவறான திட்டம் என கருதினால், அதற்கு ‘நோ’ சொல்ல அவர் என்றும் தயங்கியது இல்லை. அதேநேரத்தில், மகளிருக்கு மாதம் ரூ.1,500 வழங்கும் திட்டத்தை நாங்கள் ஒரு குழுவாக தொடங்கினோம். அதில், அவர் முக்கிய பங்கு வகித்தார்.

நேரத்துக்கு மதிப்பு கொடுக்கும் ஒரு மனிதர் அவர். மக்களைச் சந்திக்க காலை 6 மணிக்கே நேரம் ஒதுக்கிய சம்பவங்களும் உண்டு. விடாமுயற்சியுள்ள, துணிச்சலான, ஒழுக்கமான தலைவர் அவர். இந்த விமான விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும்.

இதுபோன்ற ஒரு துயர சம்பவம் மீண்டும் நிகழாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த துயரமான தருணத்தை எதிர்கொள்ள அவரது குடும்பத்தினருக்கு தைரியம் கிடைக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்” என தெரிவித்தார்.



# தமிழ்நாடு அரசு 'இது நம்ம ஆட்டம்' 2026 போட்டியில் விஎஸ்ஆர் மெட்ரிக் பள்ளி மாணவிகள் சாதனை

இராதாபுரம், ஜன.29-

தமிழ்நாடு அரசு 'இது நம்ம ஆட்டம்' 2026 என்ற போட்டியை நடத்தியது. இப்போட்டியில் இராதாபுரம் வட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளும் பங்கு பெற்றன. மாணவர்களுக்கு பலவித போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் எறிபந்து போட்டியில் ஆறு அணிகள் கலந்து கொண்டு விளையாடியது. விஎஸ்ஆர் பள்ளி மாணவிகள் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்தனர்.வெற்றி பெற்ற மாணவிகள் பஸ்லினா, அனுஷ்கா, சாய்னா, பெர்சி, சிண்ட்ரெல்லா, மமதி ரித்திகா, லிவிதா, ரித்திகா தேவி, கில்மியா ஆகியோரை பள்ளி தாளாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். போட்டியில் வெற்றி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்க்க பயிற்சிகளை கொடுத்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், தாளாளர் பாராட்டுகள் தெரிவித்தார். மேலும் துணை முதல்வர் விஜயா தினகரன் மற்றும் ஆசிரியர்களும் வெற்றி பெற்ற மாணவிகளை வாழ்த்தி பாராட்டுகளை தெரிவித்தனர்.



# வேடசந்தூர் குளத்தூரில் ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் திறப்பு விழா!

திண்டுக்கல், ஜன.29-

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, வடமதுரை ஊராட்சி ஒன்றியம் - குளத்தூர் ஊராட்சி, குளத்தூரில் ரூ. 45 லட்சம்/ மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு, கட்டிடத்தை திறந்து வைத்து வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் உரையாற்றினார்.

இவ்விழாவில் வடமதுரை மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் போ. சுப்பையன், துணைச் செயலாளர் ஜீவானந்தம், சுற்றுச்சூழல் மேம்பாட்டு அணி கிருஷ்ணகுமார், இலக்கிய அணி இளங்கோ மற்றும் துறை சார்ந்த சிறப்பு அரசு அதிகாரிகள், திமுக ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், கழக மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



■ தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., 4 தனியார் கல்லூரிகளில் பயிலும் 540 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் உள்ளார்.



# கோவை மாநகராட்சி பள்ளிகளில் 77வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

கோவை ஜன.29-

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 80 வது வார்டுக் குட்பட்ட செல்வபுரம் மாநகராட்சி ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தேசியக் கொடியேற்றும் விழா மற்றும் பரிசளிப்பு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவரும் 80வது வார்டு கவுன்சிலருமான பெ.மாரி செல்வன் கலந்து கொண்டு தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி குடியரசு தின விழாவை கொண்டாடினர்.

மாணவர்களிடையே அவர் கூறியதாவது நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழும் மாணவர்களாகிய நீங்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்.

பின்னர் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.மேலும் திராவிட மாடல் அரசு சார்பில் பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா இலவச மிதிவண்டி வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தேவசகாயம், மற்றும் தனலட்சுமி, ஆசிரியர்கள், பகுதி பொறுப்பாளர் என்.ஜே.முருகேசன், வார்டு செயலாளர் நா.தங்கவேலன், ராஜேஷ்,இளங்கோ கழக நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டாடினர்.



■ மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும், கூடுதல் கட்டடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, இணை இயக்குனர் மரு.எஸ். மீரா, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, உதவி செயற்பொறியாளர்கள் கனகராஜ், பிரியா, தாராபுரம் நகர மன்ற தலைவர் பாப்புக்கண்ணன் ஆகியோர் உள்ளனர்



# அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் குடியரசு தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம்

அலங்காநல்லூர், ஜன.29-

குடியரசு தின விழாவை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது. கொண்டையம்பட்டி ஊராட்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் வள்ளி தலைமையிலும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், முன்னிலையிலும் ஊராட்சி செயலர் ராஜேஷ், அய்யங்கோட்டை ஊராட்சி தனிச்சியத்தில் ராஜா, வடுகபட்டிஊராட்சி செயலர் பங்கஜவல்லி, அழகாபுரி ஊராட்சியின் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார், அச்சம்பட்டி ஊராட்சி செயலர் முருகேஸ்வரி, பெரியஊர் சேரி ஊராட்சி செயலர் முத்துக்குமார், ஆதனூர் மற்றும் முடுவார்பட்டி ஊராட்சி செயலர் செல்வமூர்த்தி, பாரப்பட்டி மற்றும் கோடாங்கிபட்டி ஊராட்சி செயலாளர் மாணிக்கம், எர்ரம்பட்டி மற்றும் கல்லணை ஊராட்சி செயலர் ராஜாங்கம், தண்டலை மற்றும் பன்னைகுடி ஊராட்சி செயலர் நாகராஜ், வாவிடமருதூர் மற்றும் 15 பி.மேட்டுப்பட்டி ஊராட்சி செயலர் தாய்மொழி, அ.கோவில்பட்டி மற்றும் வலையபட்டி ஊராட்சி செயலர் தெய்வேந்திரன், ராஜாக்கல்பட்டி மற்றும் 66 மேட்டுப்பட்டியில் பாலமுருகன், தேவசேரி மற்றும் அய்யூர் ஊராட்சி செயலர் அழகுமீனா, கீழசின்னணம்பட்டி ஊராட்சி செயலர்பிச்சை, சத்திரவெள்ளாளப்பட்டி ஊராட்சி செயலர் பூமிநாதன் கலந்துகொண்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்கள் தீர்மான நகலை வாசித்தனர்.

இதில் குடிநீர் தொட்டி, பேவர்பிளாக், தார்சாலை,கழிவுநீர் வாய்க்கால், அரசு கட்டிடங்கள் உள்ளிட்டவை தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. இதில் யூனியன் அலுவலர்கள்அரசு அதிகாரிகள் வருவாய்த்துறையினர் அங்கன்வாடி சத்துணவு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு சார்பில் 37 ஆவது சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

திருப்பூர், ஜன.29-

கோட்ட பொறியாளர் ரத்தினசாமி அவர்களின் அறிவுறுத்தல் படி, உதவி கோட்ட பொறியாளர் கவிதா, குணவதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பேரணியானது மாநகராட்சியில் தொடங்கி, குமரன் சிலை வழியாக நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் வரை நடைபெற்றது.

இதில் உதவி பொறியாளர்கள் வனஜா, ஜெயப்பிரகாஷ், வடக்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் வெங்கடாசலம், உதவி ஆய்வாளர் ஜெயக்குமார், ஏஎம்சி பார்மசி நர்சிங் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் கொண்ட பதாகைகள் ஏந்தி கலந்து கொண்டனர்.










# இந்திய அளவில் குவாங்டோ ஷாம்பியன்சிப் பதக்கங்களை வென்ற கோவை மாணவர்கள்




கோவை ஜன.29-

கோவை மாவட்டம் காந்திமாநகர் பகுதியில் செயல்பட்டு வரும் மிகவும் பிரபலமான சான் அகாடமி ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் மற்றும் கென்ஷு கலை மற்றும் விளையாட்டு அகாடமியை சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாடு அணியின் சார்பில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஜம்மு நகரில் உள்ள பகவதி நகரத்தில் உள்ள ஜே-கே ஸ்டேட்ஸ் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் வளாகத்தில் நடைபெற்ற 7வது தேசிய அளவிலான குவாங்கிடோ சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு தங்களது தனி திறமைகளை வெளிபடுத்தியுள்ளனர். நடைபெற்ற இப்போட்டிகளில் இந்தியா முழுவதிலும் இருந்து பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் 1000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது குறிப்பிடதக்கது. இதில் கோவை அகாடமி மாணவர்களான எஸ்.ஹெச்.அபிநவ் மற்றும் கே.எல். சர்வேஷ் ஆகியோர் ஃபுல் கான்டக்ட் ஃபைட்டிங், செமி கான்டக்ட் ஃபைட்டிங், குவான்,வெப்பன் குவான் ஆகிய பிரிவுகளில் பங்கேற்று,1தங்கப் பதக்கம் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் வென்று சாதனை படைத்துள்ளனர்.

தங்கப் பதக்கம் வென்ற எஸ்.ஹெச். அபிநவ் வருகின்ற மே மாதம் ருமேனியா நாட்டில் நடைபெற உள்ள உலக அளவிலான குவாங்கிடோ சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது இந்தச் சாதனையைத் தொடர்ந்து, தமிழ்நாடு குவான் கிடோ சங்கத்தின் செயலாளர் மதிவாணன் தமிழ்நாடு குவாங்கிடோ அணியின் பயிற்சியாளரும், தமிழ்நாடு குவாங்கிடோ சங்கத்தின் டெக்னிக்கல் டைரக்டர்மான பிராங்ளின் பென்னி, தமிழ்நாடு அணியின் மேலாளரும் பயிற்சியாளருமான அமிர்தராஜ், பயிற்சியாளர் சூரிய பிரபு, கோவை மாவட்ட குவாங்கிடோ சங்க நிர்வாகிகள், திருநாவுக்கரசு, சதீஷ் மற்றும் பெற்றோர்கள் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் களைபாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000